## தலைநகர் சென்னைக்கான சிறப்புத் திட்டங்கள் கொண்ட தேர்தல் அறிக்கை!

# ‘சென்னை சூப்பர் 6’ - ‘திராவிட மாடல் 2.0’ வாக்குறுதிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, ஏப்.20–

கழகத் தலைவரும் –முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று – “சென்னை சூப்பர்–6” எனும் ‘திராவிட மாடல் 2.O’ வாக்குறுதிகளை வெளியிட்டார்.

அதன் விவரம் வருமாறு:–

கழகத் தலைவரும் –முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (19.04.2026), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் “சென்னை சூப்பர்–6” எனும் ‘திராவிட மாடல் 2.O’ வாக்குறுதிகளை வெளியிட்டார். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அதனைப் பெற்றுக் கொண்டார்.

அதில், சென்னைக்கான மேம்படுத்தப்பட்ட பொதுவசதிகள், சென்னை முழுவதும் சிறப்பான போக்குவரத்து, திட்டமிட்ட கால அளவில் உட்கட்டமைப்புத் திட்டங்கள், மனிதாபிமானம், அறிவியல் முறையில் – கைவிடப்பட்ட நாய்களின் பிரச்சினைக்கு தீர்வு, உலகளாவிய சிறப்பு மையம், உலகளாவிய திறமைத் தளம் (Global Talent Gateway) ஆகிய தலைப்புகளிலான “திராவிட மாடல் 2.O வாக்குறுதி”களை வெளியிட்டார்.

அப்போது சென்னையில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் உடனிருந்தனர்.






